இனிமையான குழந்தைகளே! இந்த ஞானம் முற்றிலும் அமைதியாக இருப்பதற்கான ஞானமாகும். இதில் எதுவும் பேசக் கூடாது, அமைதிக் கடலான தந்தையை நினைவு செய்து கொண்டே இருங்கள்.

கேள்வி: முன்னேற்றத்திற்கான ஆதாரம் என்ன? தந்தையின் ஞானத்தை எப்பொழுது தாரணை செய்ய முடியும்?

பதில்: முன்னேற்றத்திற்கு ஆதாரம் அன்பு, ஒரு தந்தையிடம் உண்மையான அன்பு இருக்க வேண்டும். அருகில் இருந்தும் முன்னேற்றம் ஏற்படவில்லையெனில் கண்டிப்பாக அன்பில் குறை இருக்கின்றது. அன்பு இருந்தால் தந்தையை நினைவு செய்வீர்கள். நினைவு செய்வதன் மூலம் அனைத்துமே தாரணை செய்ய முடியும். முன்னேற்றத்திற்காக தனது உண்மையிலும் உண்மை யான சார்ட் எழுதுங்கள். பாபாவிடத்தில் எந்த விசயத்தையும் மறைக்காதீர்கள். ஆத்மா அபிமானி யாக ஆகி தன்னை மாற்றிக் கொண்டே இருங்கள்.

ஓம் சாந்தி. குழந்தைகளே! தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு அமருங்கள் மற்றும் தந்தையை நினைவு செய்யுங்கள். பாபா கேட்கின்றார் - நீங்கள் எப்பொழுதெல்லாம் சபைகளில் பேசுகின்றீர்களோ அப்பொழுது தன்னை ஆத்மா என்று புரிந்திருக்கின்றீர்களா? அல்லது தேகம் என்று கேட்கின்றீர்கள்? தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு இங்கு அமருங்கள். ஆத்மா தான் மறுபிறப்பில் வருகின்றது. தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு பரம்பிதா பரமாத்மாவை நினைவு செய்யுங்கள். தந்தையை நினைவு செய்வதன் மூலமே உங்களது விகர்மங்கள் விநாசம் ஆகும். இது யோக அக்னி என்று கூறப்படுகின்றது. நிராகார தந்தை நிராகார குழந்தைகளுக்குக் கூறுகின்றார் - என்னை நினைவு செய்வதன் மூலம் உங்களது பாவங்கள் அழிந்து விடும். நீங்கள் பாவனமாகி விடுவீர்கள். பிறகு நீங்கள் முக்தி ஜீவன்முக்தியை அடைவீர்கள். அனைவரும் முக்திக்குப் பிறகு ஜீவன் முக்திக்கு அவசியமாக வர வேண்டும். ஆக தன்னை ஆத்மா என்ற நம்பிக்கையுடன் அமருங்கள் என்று அடிக்கடி கூற வேண்டியிருக்கின்றது. சகோதர சகோதரிகளே! தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு அமருங்கள் மற்றும் தந்தையை நினைவு செய்யுங்கள். இந்த கட்டளையை தந்தை தான் கொடுத்திருக்கின்றார். இது நினைவு யாத்திரையாகும். என்னிடத் தில் புத்திக்கான யோகத்தைச் செலுத்தினால் உங்களது ஜென்ம ஜென்மத்திற்கான பாவம் அழிந்து விடும். இதனை அடிக்கடி உங்களுக்கு நினைவுபடுத்தி புரிய வைக்கிறார். அப்பொழுது தான் ஆத்மா அழிவற்றது, தேகம் அழியக் கூடியது என்பதைப் புரிந்து கொள்வீர்கள். அழிவற்ற ஆத்மா தான் அழியக் கூடிய தேகத்தை தாரணை செய்து நடிப்பை நடித்து ஒரு சரீரத்தை விட்டு மறு சரீரத்தை எடுக்கின்றது. ஆத்மாவின் சுயதர்மம் சாந்தியாகும். அது தனது சுய தர்மத்தையும் அறிந்திருக்க வில்லை. இப்பொழுது தந்தை கூறுகின்றார் - என்னை நினைவு செய்தால் விகர்மம் விநாசம் ஆகும். அடிப்படை விசயம் இது தான். முதன் முதலில் குழந்தைகளாகிய நீங்கள் இந்த முயற்சி தான் செய்ய வேண்டும். எல்லை யற்ற தந்தை ஆத்மாக்களுக்குக் கூறுகின்றார், இதில் எந்த சாஸ்திரங்களும் படிக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கீதையின் உதாரணம் கொடுக்கின்றீர் கள். கீதையை மட்டுமே எடுக்கின்றீர்கள், வேதங்களின் பெயர்களை ஏன் பயன்படுத்துவதில்லை? என்று

கேட்கின்றனர். பாபா கூறியிருக்கின்றார் - வேதம் எந்த தர்மத்தின் சாஸ்திரம் என்று அவர்களிடம் கேளுங்கள்?

(ஆரிய தர்மம் என்று கூறுவர்) ஆரியர்கள் என்று யாரைக் கூறுகின்றனர்? இந்து தர்மம் கிடையாது. ஆதி சநாதனத்தைச் சார்ந்தவர்கள் தேவி தேவதா தர்மத்தைச் சார்ந்தவர்கள். பிறகு ஆரியர் எந்த தர்மத்தைச் சார்ந்தவர்கள்? ஆரியர்கள் ஆரிய சமாஜத்தைச் சார்ந்தவர்களின் தர்மத்தினர்களாக இருப்பார்கள். ஆரிய தர்மம் என்ற பெயரே கிடையாது. ஆரிய தர்மத்தை ஸ்தாபனை செய்தது யார்? உண்மையில் நீங்கள் கீதையையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. முதல் விசயம் - தன்னை ஆத்மா என்று நினைத்து தந்தையை நினைவு செய்தால் சதோ பிரதானமாகி விடுவீர்கள். இந்த நேரத்தில் அனைவரும் தமோ பிரதானமாக இருக்கின்றனர். முதன் முதலில் தந்தையின் அறிமுகத்தையே கொடுக்க வேண்டும். தந்தையின் மகிமை மட்டுமே செய்ய வேண்டும். நீங்கள் சுயம் தந்தையை நினைவு செய்கின்ற பொழுது தான் இவ்வாறு உங்களால் கூற முடியும். இந்த விசயத்தில் குழந்தைகளிடத்தில் பலவீனம் இருக்கின்றது.

நினைவு யாத்திரைக்கான சார்ட் வையுங்கள் என்று பாபா அடிக்கடி கூறுகின்றார். நாம் எவ்வளவு நினைவு செய்கின்றோம்? என்று ஒவ்வொருவரும் தமது உள்ளத்தைக் கேளுங்கள். குழந்தை களாகிய உங்களது உள்ளத்தில் அளவற்ற குஷியிருக்க வேண்டும். உங்களுக்குள் அளவற்ற குஷியிருக்கின்ற பொழுது தான் மற்றவர்களுக்குப் புரிய வைக்கின்ற பொழுது (நேர்மையான) தாக்கம் ஏற்படும். சகோதர சகோதரிகளே! தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள் என்ற முக்கியமான விசயமானதைக் கூற வேண்டும். இவ்வாறு வேறு எந்த சத்சங்களிலும் கூறமாட்டார்கள். உண்மையில் சத்சங்கம் எதுவும் கிடையாது. சத்தியமான சங்கம் ஒன்றே ஒன்று தான். மற்ற அனைத்தும் தவறான சங்கங்களாகும். இங்கு முற்றிலும் புதிய விசயமாக இருக் கின்றது. வேதங்களின் மூலம் எந்த தர்மமும் ஸ்தாபனை ஆகவில்லை. ஆக நாம் ஏன் வேதங்களைப் பயன்படுத்த வேண்டும். யாரிடத்திலும் இந்த ஞானம் கிடையாது. நேத்தி நேத்தி (தெரியாது, தெரியாது) என்று தானே அவர்கள் கூறுகின்றனர். ஆக நாஸ்திகர்கள் அல்லவா! இப்பொழுது சுயம் தந்தை கூறுகின்றார் - ஆஸ்திகனாக ஆகுங்கள், தன்னை ஆத்மா என்று நினையுங்கள். இந்த விசயங்கள் கீதையில் சிறிதளவு இருக்கின்றது. வேதங்களில் கிடையாது. வேதங்கள், உபநிடதங்கள் அதிகமாக உள்ளன. இப்பொழுது அது எந்த தர்மத்தைச் சார்ந்தது? மனிதர்கள் தங்களது விசயத்தையே கூறுகின்றனர். நீங்கள் யாருடையதையும் கேட்க வேண்டாம். தந்தை எளிமையாகப் புரிய வைக்கின்றார் - தன்னை ஆத்மா என்று புரிந்து என்னை நினைவு செய்தால் பாவனமாக ஆகி விடுவீர்கள். ஆகையால் உலக சரித்திர பூகோளத்தை அறிந்து கொள்ள வேண்டும். உங்களது இந்த திரிமூர்த்தி, சக்கரம் மிகவும் முக்கியமானதாகும். இதில் அனைத்து தர்மங்களும் வந்து விடுகின்றது. முதலாவது தேவி தேவதா தர்மமாகும். திரிமூர்த்தி, சக்கரத்தை பெரியதாக செய்து டெல்லியின் முக்கிய இடங்களில், அதிகமானவர்கள் வந்து செல்லக் கூடிய இடங்களில் வையுங்கள். தகடுகளில் போர்டு இருக்க வேண்டும். ஏணிப்படியில் மற்ற தர்மங்கள் வருவதில்லை. முக்கியமானது இந்த இரண்டு சித்திரங்களாகும். இவைகளின் மூலமாகவே புரிய வைக்க வேண்டும். முக்கியமானது தந்தையின் அறிமுகமாகும். தந்தையிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கின்றது. இந்த விசயத்தில் நம்பிக்கை

ஏற்படவில்லையெனில் உங்களது எந்த விசயத்தை யும் புரிந்து கொள்ள முடியாது. ஒரு தந்தையையே புரிந்து கொள்ளவில்லையெனில் மற்ற சித்திரங்களைப் பற்றி புரிந்து கொள்வது என்பது வீண் ஆகும். அல்லாவைப் புரிந்து கொள்ளாமல் வேறு எதையும் புரிந்து கொள்ள மாட்டார்கள். தந்தையின் அறிமுகத்தைத் தவிர வேறு எந்த விசயத்தையும் பேசாதீர்கள். தந்தையிடமிருந்து தான் எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கின்றது. இப்படிப்பட்ட எளிதான விசயத்தையும் ஏன் புரிந்து கொள்வதில்லை? என்ற எண்ணம் பாபாவிற்கு வருகின்றது. உங்களது ஆத்மாவின் தந்தை சிவன், அவரிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கின்றது. நீங்கள் அனைவரும் தங்களுக்குள் சகோதரர்களாக இருக்கின்றீர்கள். இந்த விசயத்தை மறக்கின்ற பொழுது தான் தமோபிரதானமாக ஆகி விடுகின்றீர்கள். இப்பொழுது தந்தையை நினைவு செய்தால் சதோ பிரதானமாக ஆகிவிடுவீர்கள். முக்கிய விசயமே படைப்பவர் மற்றும் படைப்பு களை அறிந்து கொள்வதாகும். யாரும் அறிந்திருக்கவில்லை. ரிஷி முனிவர்களும் அறிந்திருக்க வில்லை. ஆக முதலில் தந்தையின் அறிமுகத்தைக் கொடுத்து அனைவரையும் ஆஸ்திகர்களாக ஆக்க வேண்டும். என்னை அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் அனைத்தையும் அறிந்து கொள்கின்றீர்கள் என்று தந்தை கூறுகின்றார். என்னை அறிந்து கொள்ளவில்லையெனில் நீங்கள் எதையும் புரிந்து கொள்ள முடியாது. நீங்கள் தங்களது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக் கின்றீர்கள். சித்திரங்கள் போன்றவை நாடகப்படி உருவாக்கப்பட்டிருக்கின்றது. அவைகள் சரியான தாக இருக்கின்றது. ஆனால் அவ்வளவு முயற்சி செய்கின்றீர்கள், இருப்பினும் யாருடைய புத்தியிலும் அமர்வது கிடையாது. பாபா! நாங்கள் புரிய வைப்பதில் ஏதாவது குறை இருக்கின்றதா? என்று குழந்தைகள் கேட்கின்றனர். ஆம், தவறு இருக்கின்றது என்று பாபா உடனேயே கூறிவிடுகின்றார். பாபாவைப் புரிந்து கொள்ளவில்லையெனில் உடனேயே கிளம்ப ஆரம்பித்து விடுகின்றனர். எதுவரைக்கும் தந்தையைப் புரிந்து கொள்ளவில்லையோ அதுவரைக்கும் உங்களது புத்தியில் எதுவும் அமராது என்று கூறுங்கள். நீங்களும் ஆத்மா அபிமானி நிலையில் இல்லாத வரைக்கும் கண்கள் கெட்டதாகவே இருக்கும். தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்கின்ற பொழுது தான் கண்கள் நல்லதாக ஆகின்றது. ஆத்மா அபிமானியாக இருந்தால் பிறகு உங்களை கண்கள் ஏமாற்ற முடியாது. ஆத்மா அபிமானியாக இல்லையெனில் மாயை ஏமாற்றிக் கொண்டே இருக்கும். ஆகையால் முதலில் ஆத்ம அபிமானியாக ஆக வேண்டும். உங்களது சார்ட் காண்பிக்கும் பொழுது தெரியும் என்று பாபா கூறுகின்றார். இன்று வரைக்கும் பொய், பாவம், கோபம் போன்றவை இருந்தால் தன்னையே அழித்துக் கொள்கின்றீர்கள். பாபா சார்ட்டைப் பார்த்து இவர் உண்மையை எழுதியிருக்கின்றாரா? அல்லது அர்த்தத்தைக் கூட புரிந்து கொள்ள வில்லையா? என்பதை புரிந்து கொள்கின்றார். சார்ட் எழுதுங்கள் என்று பாபா அனைத்து குழந்தை களுக்கும் கூறுகின்றார். எந்த குழந்தைகள் யோகாவில் இருப்பதில்லையோ அவர்களால் சேவையும் செய்ய முடியாது. அம்பில் கூர்மை யிருக்காது. கோடியில் சிலர் வெளிப்படுவார்கள் என்று பாபா கூறுகிறார், ஆனால் நீங்கள் யோக செய்யவில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படிக் கூறுவீர்கள்?

சுகம் காக்கை எச்சிலைப் போன்றது என்று சந்நியாசிகள் கூறுகின்றனர். அவர்கள் சுகத்திற்கான பெயரைப் பயன்படுத்துவதில்லை. பக்தி அதிகமாக

இருப்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அதில் எவ்வளவு சப்தங்கள் உள்ளன! உங்களது ஞானம் மிகவும் அமைதியானதாகும். தந்தை அமைதிக்கடலானவர் என்று கூறுங்கள். தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு தந்தையை நினைவு செய்ய வேண்டும். பாபா கூறுகின்றார் - மன்மனாபவ! இந்த வார்த்தையும் கூற வேண்டாம். இந்துஸ்தானின் மொழி ஹிந்தி ஆகும். பிறகு மற்ற மொழியாகிய சமஸ்கிருதம் ஏன்? இப்பொழுது இந்த அனைத்து மொழிகளையும் விட்டு விடுங்கள். தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள் என்று முதலில் சொற்பொழிவு செய்யுங்கள். அதிகமானவர்கள் தங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ள முடிவதில்லை, தந்தையையும் நினைவு செய்ய முடிவதில்லை. தனது நஷ்டத்தை யாரும் புரிந்து கொள்வதில்லை. தந்தையின் நினைவில் தான் நன்மையிருக்கின்றது. தன்னை ஆத்மா என்று புரிந்து கொண்டு தந்தையை நினைவு செய்யுங்கள் என்று வேறு எந்த சத்சங்கத்திலும் கூறுவதில்லை. குழந்தைகள் ஒருபொழுதும் ஒரே இடத்தில் அமர்ந்து தந்தையை நினைவு செய்வார்களா என்ன? எழுந்தாலும், அமர்ந்தாலும் தந்தையின் நினைவு இருக்கும். ஆத்மா அபிமானியாக ஆகும் பயிற்சி செய்ய வேண்டும். நீங்கள் அதிகமாகப் பேசுகின்றீர்கள், அந்த அளவிற்குப் பேச வேண்டாம். நினைவு யாத்திரை தான் முக்கிய விசயமாகும். யோக அக்னியின் மூலம் தான் நீங்கள் பாவனமாக (தூய்மையாக) ஆவீர்கள். இந்த நேரத்தில் அனைவரும் துக்க மானவர்களாக இருக்கின்றனர். தூய்மை ஆவதின் மூலம் தான் சுகம் கிடைக்கின்றது. நீங்கள் ஆத்மா அபிமானியாக ஆகி மற்றவர்களுக்குப் புரிய வைத்தால் அவர்களுக்கு அம்பு பதியும். சிலர் தான் (சுயம்) விகாரியாக இருந்து, மற்றவர்களுக்கு விகாரமற்று இருங்கள் என்று கூறினால் அவர்களுக்கு அம்பு பதியாது. தந்தை கூறுகின்றார் - குழந்தைகளே! நீங்கள் சுயம் நினைவு யாத்திரையில் இருப்பது கிடையாது, ஆகையினால் அம்பு பாய்வது கிடையாது.

இப்பொழுது தந்தை கூறுகின்றார் - கடந்தது கடந்ததாக இருக்கட்டும். முதலில் தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். நான் என்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை எந்த அளவிற்கு நினைக்கின்றேன்? என்று தனது உள்ளத்தையே கேளுங்கள். தந்தை நம்மை உலகிற்கே எஜமானர்களாக ஆக்குகின்றார். நாம் சிவபாபாவின் குழந்தைகள் எனில் நாம் கண்டிப்பாக உலகிற்கு எஜமானர்களாக ஆக வேண்டும். அந்த ஒரே நாயகன் வந்து உங்கள் எதிரில் நிற்கின்றார் எனில் அவர் மீது அதிக அன்பு இருக்க வேண்டும். அன்பு என்றால் நினைவு. திருமணம் ஆகின்ற தெனில் மனைவிக்கு கணவனின் மீது எவ்வளவு அன்பு ஏற்படுகின்றது! தற்போது உங்களுக்கும் நிச்சயதார்த்தம் ஏற்பட்டிருக்கின்றது, திருமணம் அல்ல. இந்த திருமணம் விஷ்ணுபுரிக்குச் செல்கின்ற பொழுது தான் ஏற்படுகின்றது. முதலில் சிவபாபாவிடம் செல்வீர்கள், பிறகு மாமியார் வீட்டிற்குச் செல்வீர்கள். நிச்சயதார்த்தத்தின் குஷி குறைவாக இருக்குமா என்ன? நிச்சயதார்த்தம் ஏற்பட்டதும் நினைவும் உறுதியாகி விடுகின்றது. சத்யுகத்திலும் நிச்சயதார்த்தம் ஏற்படுகின்றது. ஆனால் அங்கு ஒருபொழுதும் நிச்சயதார்த்தம் துண்டிக்கப்படுவதில்லை. திடீர் மரணம் ஏற்படுவ தில்லை. இங்கு தான் இவ்வாறு ஏற்படுகின்றது. குழந்தைகளாகிய நீங்கள் குடும்பத்திலிருந்தாலும் தூய்மையாக ஆக வேண்டும். மிக அருகாமையிலும் இருக்கின்றனர், இருப்பினும் முன்னேற்றம் ஏற்படுவதில்லை. யார் அந்த அன்புடன் வருகின்றார்களோ அவர்களுக்கு அதிக முன்னேற்றம் ஏற்படுகின்றது. நினைவு இல்லையெனில் அன்பு இருப்பது கிடையாது. ஆக பாபாவின் ஞானத்தை

தாரணை செய்ய முடிவதில்லை.

பகவானின் மகாவாக்கியம் - காமம் மிகப் பெரிய எதிரி, அது முதல், இடை, கடைசி வரை துக்கம் கொடுக்கின்றது என்ற செய்தியை குழந்தைகளாகிய நீங்கள் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். நீங்கள் தூய்மையான சத்யுகத்திற்கு எஜமானர்களாக இருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் கீழே விழுந்து அழுக்காகி விட்டீர்கள். இப்பொழுது இது கடைசிப் பிறப்பு, மீண்டும் தூய்மை ஆகுங்கள். காமச்சிதையில் அமரக்கூடிய பழக்கத்தை விட்டு விடுங்கள். குழந்தைகளாகிய நீங்கள் எப்பொழுது யோகத்தி-ருந்து கூறுகின்றீர்களோ அப்பொழுது மற்றவர்களின் புத்தியில் அமரும். ஞான அம்பில் யோகத்தின் கூர்மை வேண்டும். முதல் முக்கியமான விசயம் ஒன்று தான். பாபா, நாங்கள் அதிகமாக முயற்சி செய்கின்றோம், இருப்பினும் சிலரே உருவாகின்றனர் என்று குழந்தைகள் கூறு கின்றனர். யோகாவில் இருந்து புரிய வையுங்கள் என்று பாபா கூறுகின்றார். நினைவு யாத்திரைக் கான முயற்சி செய்யுங்கள். இராவணனிடத்தில் தோல்வியடைந்து விகாரிகளாக ஆகிவிட்டீர்கள், இப்பொழுது நிர்விகாரிகளாக ஆகுங்கள். தந்தையின் நினைவின் மூலம் உங்களது அனைத்து மன ஆசைகளும் நிறைவேறி விடும். பாபா சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆக்குகின்றார். பாபா அதிக கட்டளைகளைக் கொடுக்கின்றார், ஆனால் குழந்தைகள் நல்ல முறையில் எடுத்துக் கொள்வது கிடையாது. பிற விசயங்களில் சென்று விடுகின்றீர்கள். முக்கியமானது தந்தையின் செய்தி கொடுப்பதாகும். ஆனால் தானே நினைவு செய்ய வில்லையெனில் மற்றவர்களுக்கு எப்படிக் கூறுவீர்கள்? ஏமாற்றும் வேலை நடக்காது. விகாரங்களில் செல்லாதீர்கள் என்று மற்றவர்களுக்குக் கூறி விட்டு தான் சென்று விட்டால் உள்ளத்தில் வருத்தம் ஏற்பட்டு கொண்டேயிருக்கும். இப்படி ஏமாற்ற கூடியவர்களும் உள்ளனர், ஆகையால் பாபா கூறுகின்றார் - முக்கியமான விசயம் தந்தை. தந்தையை அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் அனைத்தையும் அறிந்து கொண்டவராக ஆகின்றீர்கள். தந்தையை அறிந்து கொள்ளாததனால் நீங்கள் எதையும் புரிந்து கொள்ள முடியாது. நல்லது.

இனிமையிலும் இனிய செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) உள்ளுக்குள் தந்தையை நினைத்து மகிழ்ச்சியாக இருந்து கொண்டே மற்றவர்களுக்கும் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். அனைவருக்கும் ஒரு தந்தையின் மகிமையைக் கூற வேண்டும்.

2) ஆத்ம அபிமானியாக ஆகக் கூடிய பயிற்சி அதிகமாக செய்ய வேண்டும், அதிகமாக பேசக் கூடாது. கடந்த காலங்கள், கடந்தவைகளாக இருக்கட்டும், முத-ல் நீங்கள் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

வரதானம் : பிராமண வாழ்க்கையில் பல்வேறு வகையான அனுபவங்களின் மூலம் அழகை (இரமணீகர) அனுபவம் செய்யக் கூடிய நிறைவான ஆத்மா ஆகுவீர்களாக.

வாழ்க்கையில் ஒவ்வொரு மனித ஆத்மாவின் விருப்பங்கள்

விதவிதமாக உள்ளன. எனவே, முழு நாளில் விதவிதமான தொடர்பு, விதவிதமான சொரூபத்தினுடைய பல்வேறு விதமான அனுபவம் செய்யுங்கள். அப்பொழுது மிகவும் அழகான வாழ்க்கையை அனுபவம் செய்வீர்கள். பிராமண வாழ்க்கை பகவானுடன் அனைத்து சம்பந்தங்களையும் அனுபவம் செய்யக்கூடிய நிறைந்த வாழ்க்கை ஆகும். ஆகையினால், எந்த ஒரு சம்பந்தத்தினுடைய குறைவும் இருக்கக் கூடாது. ஒருவேளை, யாராவது சிறிய அல்லது சாதாரண (இலேசான) தொடர்பில் ஆத்மா வினுடைய சம்பந்தம் கலப்படம் ஆகிவிட்டால் அனைத்தும் என்ற வார்த்தை முடிவடைந்து விடும். எங்கு சர்வ அனைத்து என்பது இருக்கிறதோ, அங்கு தான் சம்பன்னத்தன்மை (முழுமை தன்மை) இருக்கிறது. ஆகையினால், அனைத்து சம்பந்தங்களால் நினைவு சொரூபம் ஆகுங்கள்.

சுலோகன்: தந்தைக்கு சமமாக அவ்யக்த ரூபமாகி இயற்கையினுடைய ஒவ்வொரு காட்சியையும் பார்த்தீர்கள் என்றால் குழப்பத்தில் வரமாட்டீர்கள்.